MLWA HSS Madurai - 625001 (Run by Jain Educational and Empowerment Trust)
Plus Two 2 Mark Problem Only L 7 - L 9
12th Standard
**கணக்குப்பதிவியல்**

Date : 15-Jan-19

Reg.No. :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Time : 01:00:00 Hrs

Total Marks : 46

**Answer All**

23 x 2 = 46

1) X, Y, Z என்ற கூட்டாளிகள் 1/2, 1/5, 3/10 எனும் விகித்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். Y என்பவர் விலகினார். X, Z என்ற இரு கூட்டாளிகளின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் யாது ?

2) பாண்டியன் வரையறு நிறுமம் ஒன்று ரூ 100 வீதம் 1,000 பங்குகளை ரூ 20 முனைமத்தில் வெளியிட்டது.குறிப்பேட்டுப் பதிவு தருக

3) ராமு,சோமு, கோபு என்ற கூட்டாளிகள் 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 2005 ஜனவரி 1 அன்று கோபு என்பவர் விலக விரும்புகிறார் .அவர்களின் சொத்துகள் பொறுப்புகள் பின்வருமாறு மறுமதிப்பீடு செய்வதென முடிவெடுத்தனர் .
(அ ) கட்டடத்தின் மதிப்பு ரூ.30,000 அதிகரிப்பது .
(ஆ) சரக்கிருப்பு , அறைகலன் மற்றும் பொறிவகை மீது முறையே ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.23,000 என தேய்மானம் ஒதுக்குவது .
(இ ) கொடுபடா பொறுப்பு ரூ.2,000 க்கு ஒதுக்கீடு செய்வது கூட்டாளிகள் முடிவுகளைச் செயல்படுத்துதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து , மருமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்க .

4) மணி, நாகப்பன், உலகநாதன் என்ற கூட்டாளிகள் முறையே 4 : 3 : 3 எனும் விகித்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். உலகநாதன் என்பவர் விலகிய பிறகு அவரின் பங்கை மணி, நாகப்பன் இருவரும் 3 : 2 எனும் விகிதத்தில் பிரித்து எடுத்துக் கொண்டனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் யாது ?

5) C, D, E என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலபா நட்டம் பகிர்ந்து வந்தனர் . D விலக விரும்பியவுடன் , பின்வருமாறு சொத்துகள் , பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்தனர்.
(அ) பதிவு பெறா முதலீடுகள் ரூ. 3,000 கணக்கில் கொண்டு வருவது .
(ஆ) பறபல கடனீந்தோரிடமிருந்து ரூ. 4,000 போக்கெழுதுவது
(இ) இயந்திரம் மீது ரூ.1,000 மற்றும் அறைகலன் மீது ரூ.2,000 தேய்மானம் நீக்குக.
(ஈ) நற்பெயர் ரூ. 15,000 மதிப்புக்குத் தோற்றுவிப்பது .
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து , மறுமதிப்பிட்டுக் கணக்கு தயார் செய்க .

6) அமலா, விமலா என்ற ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள் முறையே 5:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர் .1.4.2004 அன்று ஏடுகளில் காப்பு நிதி 48,000 ஆகக் காட்டுகிறது .அதே நாளில் கோமளா என்பவரைச் சேர்க்க முடிவெடுத்தனர் .குறிப்பேட்டுப் பதிவு தருக.

7) சங்கர், சேகர், சாரதி என்ற கூட்டாளிகள் 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். பின்வரும் நிறுவனச் சொத்துக்கள், பொறுப்புகள் மறுமதிப்பீட்டுக்குட்பட்டு சாரதி என்பவர் விலக முடிவெடுத்தார். (அ) கட்டட மதிப்பு ரூ. 33,000 மதிப்பேற்றம் செய்வது.
(ஆ) பதிவு பெறாமலிருந்த முதலீடுகள் ரூ. 6,000 கணக்கில் கொண்டு வருவது
(இ) சரக்கிருப்பு மீது ரூ. 3,000; அறைகலன் மீது ரூ. 1,500 தேய்மானம் நீக்குவது
(ஈ) பறபல கடனீந்தோர் மீது ரூ. 1,500 போக்கெழுதுவது தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கு தயார் செய்க.

8) சபாபதி, திருமலை, உமாபதி என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 எனும் விகித்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். திருமலை விலகிய உடன் அவரின் பங்கை இருவரும் சமமாகப் பிரித்து எடுத்துக் கொண்டனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் யாது ?

9) சாய் வரையறு நிறுமம் ரூ 10 வீதம் 10,000 பங்குகளை பங்கு ஒன்றிற்கு ரூ 2 முனைமத்தில் வெளியிட்டது.அனைத்துப் பங்குகளுக்கும் மொத்தமாக ரொக்கம் பெறப்பட்டது . குறிப்பேட்டுப் பதிவு தருக

10) பொன்மலர், தேன்மொழி என்ற கூட்டாளிகள் முறையே 7:3 விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் கனிமொழி என்பவரை 1/6 கூட்டுக்குச் சேர்ப்பதென முடிவு செய்தனர் .ஏடுகளில் நற்பெயர் ரூ .60,000 ஆகக் காட்டுகிறது .ஆனால் சேர்ப்பின் பொழுது ரூ .40.000 என மதிப்பிடப்பட்டது. நற்பெயரின் ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்புக்கு பதிவு தருக.

11) ஸ்ரீதர் வரையறு நிறுமம் ரூ. 100 வீதம் 20,000 பங்குகளை 10 % தள்ளுபடியில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினை தருக.

12) வினோத் வரையறு நிறுமம் பங்கு ஒன்று ரூ.100 வீதம் 10,000 பங்குகளை 10%தள்ளுபடியில் ரொக்கத்தில் வெளியிட்டது.குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

13) வினோத் வரையறு நிறுமம் ரூ. 10 வீதம் 40,000 முன்னுரிமைப் பங்குகளை ரூ. 3 முனைமத்தில் வெளியிட்டது. உரிய குறிப்பேட்டுப் பதிவினை தருக.

14) 'அ ','ஆ ' என்ற இரு கூட்டாளிகள் முறையே 6:4 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர்.'இ' என்பவரை புதிய கூட்டாளியாகச் சேர்த்தனர் .'அ ' என்பவர் 'இ ' என்பவருக்கு தன் பங்கில் 1/5 ம் ,'ஆ ' என்பவர் 'இ' என்பவருக்கு தன் பங்கில் 2/5 ம் வழங்கினர் .புதிய இலாப பகிர்வு விகிதம் கணக்கிடுக.

15) ரோஜா, மீனா, சோபனா என்ற கூட்டாளிகள் முறையே 5 : 4 : 3 எனும் விகித்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். ரோஜா விலகினார். அவரின் பங்கை முழுமையாக மீனா எடுத்துக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் யாது ?

16) ஈஸ்வரி,ராணிகுமாரி என்ற கூட்டாளிகள் முறையே 7:5 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர் .அவர்கள் சித்ரா என்பவரைச் சேர்த்துக்கொள்ள ஒப்புக்கொண்டு ஈஸ்வரி தன் பங்கில் 1/7 பங்கும் ,ராணிகுமாரி தன் பங்கில் 1/5 பங்கும் தியாகம் செய்தனர் .புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடுக.

17) பகவதி வரையறு நிறுமம் பங்கொன்று ரூ. 10 வீதம் 10,000 பங்குகளை 10 % தள்ளுபடியில் பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிடப்பட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 2.50
ஒதுக்கீட்டின் போது ரூ. 3.00
முதலாவது மற்றும் இறுதி
அழைப்பின் போது ரூ. 3.50 100 பங்குகள் மீதான இறுதி அழைப்பு தவிர ஏனைய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன. இப்பங்குகளை உரிய அறிவிப்பு கொடுத்து நிறுமம் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்புக்கான பதிவினைச் செய்க.

18) ஆல்பா வரையறு நிறுமம் 1.1.98 அன்று பங்கொன்று ரூ. 10 வீதம் 1,00,000 பங்குகளை விண்ணப்பத்தின் பொழுது ரூ. 2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. நிறுமம் 1,20,000 பங்குகள் வேண்டி விண்ணப்பம் பெற்றது. மிகுதியான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு தொகை திருப்பப்பட்டது. தேவையான பதிவுகளை தருக.

19) காயத்ரி,சுமித்ரா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர்.31.12.2002 அன்று நிறுவனத்தின் ஏடுகள் பொதுக்காப்பு ரூ .50,000 ஆகவும் இலாப நட்டக் கணக்கு பற்று இருப்பாக ரூ .30,000மும் காட்டுகின்றன .பவித்ரா என்பவரை கூட்டாண்மையில் சேர்ப்பதென முடிவு எடுத்தனர்.குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

20) ஜபீன் ,கதிஜா என்ற கூட்டாளிகள் முறையே 2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வருகின்றனர் .அவர்கள் சுல்தானா என்பவரை சேர்த்துக் கொண்டனர் .அவர்களுடைய புதிய இலாப விகிதம் 3:2:1 சேர்ப்பின் பொழுது நற்பெயர் ஏடுகளில் இல்லாததால் ரூ .36,000 என மதிப்பிடப்பட்டு தோற்றுவிக்கப்பட்டது .
மறுமதிப்பீட்டு முறையில் நற்பெயர் குறித்த குறிப்பேட்டுப் பதிவு தருக.

21) ரமேஷ் மற்றும் சுரேஷ் என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர் .அவர்கள் மகேஷ் என்பவரைச் சேர்த்த பிறகு புதிய இலாப விகிதம் 7:4:3, தியாக விகிதம் கண்டுபிடிக்க.

22) அருண் வரையறு நிறுமம் ரூ 10 வீதம் 10,000 பங்குகளை பங்கு ஒன்றிற்கு ரூ 1 தள்ளுபடியில் ரொக்கத்திற்கு வெளியிட்டு முழுவதையும் ஒப்பி பெற்றது.குறிப்பேட்டுப் பதிவு தருக.

23) P, Q, R என்ற கூட்டாளிகள் 2 : 2 : 1 எனும் விகித்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். Q விலகியவுடன் தொடரும் கூட்டாளிகளின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் 4 : 3. ஆதாய விகிதம் கணக்கிடுக.

**Work Hard ... Success is Yours ...**

*****************************************